தார்மீக

# தத்துவம்

ஓர் அறிமுகம்



மர்வான் முஹம்மத்

# தார்மீக தத்துவம்

## ஓர் அறிமுகம்

மர்வான் முஹம்மத்

**Language:**
Tamil

*DHAARMEEKA THATHTHUWAM OOR ARIMUKAM*
*(Moral Philosophy – An Introduction)*

**Author:**
Marvan Mohamed

**First Edition:**
December, 2018

**Address:**
No. 129/6, Moulana Road, Semmanodai 07,
Valaichchenai, Batticoloa, Sri Lanka.
Tel.: +94 767097460
E-mail: mmarvan@gmail.com

**மொழி:**
தமிழ்

***தார்மீக தத்துவம் ஓர் அறிமுகம்***

**ஆசிரியர்:**
மர்வான் முஹம்மத்

**முதலாம் பதிப்பு:**
டிசம்பர், 2018

**முகவரி:**
இல.129/6, மவ்லானா வீதி, செம்மணோடை 07,
வாழைச்சேனை, மட்டக்களப்பு, ஸ்ரீ லங்கா.
தொ.பே.: +94 767097460
மி.அஞ்சல்: iceed2007@gmail.com

## உள்ளடக்கம்

முகவுரை .................................................................1
ஒரு செயலை சரியானதாக அல்லது தவறானதாக மாற்றுவது எது? ......3
நெறிமுறை ஒழுக்கவியல் (*Normative Ethics*) ..............................4
ஒழுக்க நடத்தைகளைத் தீர்மானிக்கும் மூன்று அளவீடுகள் ................5
நற்குணக் கோட்பாடு (*Virtue Theories*) ...................................5
ஒழுக்கக் கோட்பாடு (*Moral Theory*) ..........................................6
1.பின்விளைவு-வாதம் (*Consequentialism*).....................................6
1.1 பயனெறிவாதம் (*Utilitarianism*) .........................................6
பயனெறிவாதத்தில் பயன் (*Utility*) என்றால் என்ன? ..................... 7
அ. இன்பவாதம் (*Hedonism*) ..................................................... 7
ஆ. பன்மைவாதம் (*Pluralism*)...................................................8
பயனெறிவாதத்தில் சமத்துவம் (*Equality*) என்றால் என்ன? ...........8
விமர்சனங்கள் ............................................................................8
2.கடமை-வாதம் (*Deontology*)..................................................... 9
டேவிட் ரொஸ்ஸின் பார்வை ......................................................11
விமர்சனம் ................................................................................11
தற்போதைய சமூகத்தில் நாம் காணும் ஒழுக்கவியல் பிரச்சினைகள் .... 12
போர் மற்றும் சித்திரவதை .......................................................... 12
கருக்கலைப்பு ............................................................................ 13
ஆபாசம் மற்றும் தணிக்கை ..........................................................14
போதைப்பொருள் ...................................................................... 15
ஊடகவியல் .............................................................................. 15
முடிவுரை .................................................................................18
உசாத்துணைகள் ........................................................................19

**முகவுரை**

“தார்மீக தத்துவம் ஓர் அறிமுகம்” எனும் இந்நூலினூடாக “ஒழுக்க மெய்யியல்” (Moral Philosophy) எனும் அறிவுத்துறையை எளியவழிவில் அறிமுகம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கே, ஒழுக்க மெய்யியல் சார்ந்த இரு முக்கியமான கேள்விகள் அல்லது பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன. ஒன்று, ஒழுக்கவியல் நடத்தைகளைத் தீர்மானிப்பதற்கான அளவீடுகள் பற்றியது. மற்றையது, இன்றைய சமூகத்தில் காணப்படும் ஒழுக்கப் பிரச்சினைகள் பற்றியதாகும்.

ஒழுக்கவியல் அல்லது ஒழுக்க மெய்யியலானது, ஒழுக்க ரீதியாக எது நல்லது? எது கெட்டது? அல்லது எது சரியானது? எது தவறானது? என்பவற்றை ஆராய்கின்ற அறிவுத்துறையாகும். ஒழுக்கவியல் எனும் பதமானது, ஒழுக்க மதிப்பீடுகள் மற்றும் ஒழுக்கவிதிகள் தொடர்பாகப் பேசுகின்ற எந்தவொரு கோட்பாட்டிற்கும், சிந்தனை முறைமைக்கும் உபயோகிக்கப்படுகிறது.

நாம் எப்படி வாழ வேண்டும்? நாம் எப்படி மகிழ்ச்சியை, அறிவை, நற்பண்பை அல்லது அழகிய பொருட்களின் உருவாக்கத்தை நோக்க வேண்டும்? நாம் மகிழ்ச்சியைத் தேர்ந்தெடுத்தால், அது நமக்கு மட்டும் உரிய மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா? அல்லது எல்லோருக்கமான மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா?

மேலும், நாம் எதிர்நோக்கும் அதிகமான ஒழுக்கவியல் கேள்விகள் பின்வருமாறு அமைவதைக் காணலாம்.

ஒரு நல்ல காரியத்தில் நேர்மையற்றிருப்பது சரியா?

உலகில் பிற இடங்களில் மக்கள் பட்டினியாய் இருக்கும்போது நாம் மட்டும் வளமாக வாழ்வது நீதியாகுமா?

அப்பாவி மக்கள் கொல்லப்படலாம் எனும் சந்தேகத்துக்குரிய போருக்குப் போவது தகுமா?

ஒரு மனிதனை குலோனிங் முறையில் உருவாக்குவதோ அல்லது மருத்துவப் பரிசோதனையில் மனித கருக்களை அழிப்பதோ தவறாகுமா?

நம்மை அடுத்து வரவிருக்கும் மானுடத் தலைமுறையினர் விடயத்திலும், இப்பூமியில் எம்மோடு வாழ்கின்ற மனிதனல்லாத விலங்குகள் விடயத்திலும் நாம் கொண்டிருக்கும் ஒழுக்கக் கடமைகள் என்ன?

இவையல்லாத எத்தனையோ கேள்விகள் ஒழுக்கவியல் ரீதியாக எழுப்பப்படுவதைப் பார்க்கலாம். எல்லா மட்டங்களோடு தொடர்புபடுகின்ற இது போன்ற கேள்விகளை ஒழுக்கவியல் ஆராய்கின்றது. அதன் கருப்பொருள் நடைமுறை ரீதியாக முடிவெடுப்பதிலுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியதாகும். அதன் முக்கிய கரிசனையானது, மனித நடவடிக்கைகளை சரியானது அல்லது தவறானது என்று மதிப்பிடக்கூடிய முடிவான பெறுமானம் (*Value*) மற்றும் அளவுகோல்கள் (*Standards*) ஆகியவற்றின் இயல்பு பற்றியதாகும்.

## ஒரு செயலை சரியானதாக அல்லது தவறானதாக மாற்றுவது எது?

ஒழுக்கவியல் (*Ethics*), ஒழுக்கத் தீர்ப்புகள் மற்றும் ஒழுக்கக் கோட்பாடுகள் பற்றியதாகும். இவை ஒழுக்கவியல் என்பதின் அர்த்தம் தொடர்பிலான விரிவாக்கமாகும். ஆரம்ப காலங்களில் ஒழுக்கவியல் எனும் பதம் அறநெறி பற்றியதாக மட்டும் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, அறநெறி என்பதை தனது பாடவிடயமாகக் கொண்ட ஒரு கற்கைத்துறையாக அல்லது ஆய்வுத்துறையாக காணப்பட்டது. இப்பயன்பாட்டில் ஒழுக்கவியல் ஒழுக்கத் தத்துவத்திற்கு (*Moral Philosophy*) சமமாகக் காணப்பட்டது.

ஒழுக்கவியல் எப்போதும் தத்துவத்தின் ஒரு கிளையாக் கருதப்பட்டு வந்தாலும், அதன் அனைத்து அறிவுசார் பயன்பாட்டின் இயல்பும் மானுடவியல், உயிரியல், பொருளாதாரம், வரலாறு, அரசியல், சமூகவியல் மற்றும் இறையியல் போன்ற ஏனைய பல கற்கைத்துறைகளோடு தொடர்புகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

இருப்பினும், இத்தகைய துறைகளிலிருந்து ஒழுக்கவியல் வேறுபடுகின்றது. ஏனெனில், விஞ்ஞானங்களும் ஆய்வை மேற்கொள்கின்ற ஏனைய துறைப்பிரிவுகளும் செயற்படுகின்ற வழியில் ஒரு திட்டவட்டமான உண்மை அறிவைப் பெறுவதாக இல்லை. மாறாக, இது ஒழுக்கக் கோட்பாடுகளின் இயல்புகளைத் தீர்மானிக்கவும், இவ்விதிகளின் தொகுதியை நடைமுறையிலுள்ள ஒழுக்கப் பிரச்சினைகளில் செயற்படுத்திப் பார்க்கவும் முற்படுகிறது.

இந்தவகையில், ஒரு செயலை ஒழுக்க ரீதியாக மதிப்பிடுவதைப் பற்றி ஒழுக்கவியலின் பிரிவான நியமுறை ஒழுக்கவியல் விசேடமாக ஆராய்கின்றது.

## நெறிமுறை ஒழுக்கவியல் (*Normative Ethics*)

நியமமுறை ஒழுக்கவியல் அல்லது நெறிமுறை ஒழுக்கவியல் சரியான மற்றும் தவறான நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒழுக்க அளவீடுகள் மற்றும் விதிகள் பற்றி ஆராய்கின்றது. உண்மையில் சரியான நடத்தைக்கான பரிசோதனை முறையை இது தேடுகிறது. ஒழுக்க அளவீடுகள் ஆரம்ப காலம் தொடக்கம் இன்றுவரை வேறுபட்டுக் காணப்படுகின்றன.

ஒழுக்க நடத்தைகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் விதிகளில் "பொன்விதி" என்பதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். பொன்விதி என்பது நெறிசார்ந்த விதியின் ஒரு பாரம்பரிய அளவீடாகும். "மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ அதனையே மற்றவர்களுக்கு நாம் செய்ய வேண்டும்" என்பதை பொன்விதி குறிப்பிடுகிறது.

எனது அண்டைவீட்டார் எனது காரைத் திருடுவதை நான் விரும்பாத போது, அவருடைய காரை நான் திருடுவது தவறானதாகும். நான் பட்டினியில் இருக்கும்போது மக்கள் எனக்கு உணவளிக்க வேண்டும் என்று விரும்பினால், நானும் மக்கள் பட்டினியில் இருக்கும்போது உணவளிக்க வேண்டும்.

இந்தவகை காரணியைப் பயன்படுத்தி ஒரு காரியம் சரியானதா அல்லது தவறானதா என்பதை கோட்பாட்டளவில் தீர்மானிக்க முடியும். இவ்வாறு, பொன்விதியைப் பயன்படுத்தும் போது, நான் பொய் சொல்வதும், தொந்தரவு செய்வதும், ஒடுக்கி பலவீனப்படுத்துவதும், மற்றவர்களைத் தாக்குவதும், கொலை செய்வதும் தவறானதாய் அமையும்.

ஒழுக்கவிதியின் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் பொன்விதி, பல்வேறு செயற்பாடுகள் பற்றி நாம் தீர்மானிப்பதற்கான ஒரு தனிவிதியாக பாரம்பரியமாக கையாளப்பட்டு வருவதைக் காணலாம். இது தவிர, இன்னும் சில ஒழுக்கவிதிகளும், அளவீடுகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒழுக்க நடத்தைகளைத் தீர்மானிக்கும் மூன்று அளவீடுகள்

நெறிசார் ஒழுக்கவியலில் முக்கிய ஆய்வாக இருப்பது ஒழுக்க நடத்தைகளை மதிப்பிடுவதற்கான ஒரேயொரு முடிவான அளவீடு மட்டும்தானா இருக்கிறது? என்பதாகும். அது, ஒரு தனிவிதியாக இருக்கலாம் அல்லது விதிகளின் தொகுப்பாக இருக்கலாம். இது தொடர்பில் மூன்று அளவீடுகள் குறிப்பிடப்படுகின்றன. இவைகள்தான் ஒரு செயலை சரியானதாக அல்லது தவறானதாக மாற்றக் கூடிய அல்லது மதிப்பிடுவதற்குரிய அளவீடுகளாகும். அவை பின்வருமாறு,

1. நற்குணக் கோட்பாடு (*Virtue Theories*)
2. கடமைக் கோட்பாடு (*Duty Theories*)
3. விளைபயன் கோட்பாடு (*Consequentialist Theories*)

### நற்குணக் கோட்பாடு (*Virtue Theories*)

இது கிரேக்க காலத்திலிருந்து கையாளப்பட்டு வருகின்ற ஒரு அளவீடாகும். துல்லியமாக வரையறுக்கப்பட்ட விதிகளை நற்பண்பானது கொண்டிருப்பதாக பிளேட்டோ போன்ற பாரம்பரிய தத்துவவாதிகள் பலர் நம்புகிறார்கள். இதன்படி, இவ்வாறான விதிகளைப் படிப்படியாக நாம் கற்று, நமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இருப்பினும், நற்குண ஒழுக்கவியலானது, நற்குண ஒழுக்க விதிகளைக் கற்பதின் மீது குறைவாக முக்கியத்துவத்தை வழங்குகின்றது. அதற்கு பதிலாக, இரக்க மனப்பான்மை போன்ற நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்துக் கொள்வதை வலியுறுத்துகின்றது. உதாரணமாக, நாம் இரக்க மனப்பான்மையை வளர்த்துக் கொண்டோமானால், இரக்க மனப்பான்மையை வெளிப்படுத்த வேண்டிய இடங்களில் வழக்கமாகவே அவ்வாறு நடந்துகொள்வோம்.

இது பெரும்பாலும் சமயங்களின் கருத்தாகவும் உள்ளது. சமயங்களும் கூட சில காரியங்களை நல்லது என்பதாகவும், சில காரியங்களை கெட்டது என்பதாகவும் வரையறுத்துத் தந்துள்ளன. ஆனால், அவ்வாறு வரையறுப்பதற்கான அளவீடுகள் குறித்து எவ்வித கருத்தையும் வெளியிடுவதில்லை அல்லது அவை அவ்வாறுதான் கடவுளால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றன.

**ஒழுக்கக் கோட்பாடு** (*Moral Theory*)

ஒழுக்கக் கோட்பாடு என்பது ஒழுக்கப் பெறுமானங்களின் அளவீடு அல்லது அளவீடுகளின் தொகுப்பு பற்றிப் பேசுகின்றது. இதில் மிகவும் பிரதான கேள்வி யாதெனில், "எவ்வாறு, எந்த அளவீட்டின் அல்லது எந்த அளவீட்டுத்தொகுதியின்படி மனித நடத்தைகளின் பெறுமானம் பற்றிய தீர்மானங்களை எடுப்பது?" என்பதாகும். உதாரணமாக, ஏன் உண்மை பேசுவது நல்லது, பொய் கூறுவது கெட்டது?. ஏன் அன்பு செலுத்துவது நல்லது, வெறுப்பது கெட்டது?

மேலே கூறப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையில், நற்குணக்கோட்பாடு தவிர சமகாலத்தில் பிரதானமான இருவேறு ஒழுக்கக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு.

1. பின்விளைவு–வாதம் (*Consequentialism*)
2. கடமை–வாதம் (*Deontology*)

**1.பின்விளைவு–வாதம்** (*Consequentialism*)

பின்விளைவுவாதிகள், ஒரு செயல் பற்றிய ஒழுக்கத் தீர்ப்புக்கான அளவீடு அச்செயலின் விளைவாக அல்லது முடிவாக இருக்கிறது என்பதாகக் கருதுகின்றனர். உதாரணமாக, பொய் கூறுவதின் நல்லது அல்லது கெட்டது பற்றி தீர்ப்பளிக்கும் போது, மனித வாழ்வில் பொய் கூறுவதால் ஏற்படும் பின்விளைவுகளைக் கருத்திற்கொள்ள வேண்டும். இக்கோட்பாட்டாளர்களின் பார்வையில், பொய் கூறுவது தன்னளவில் தவறானது கிடையாது. மாறாக, அது தீங்கையும், சங்கடத்தையும் பின்விளைவாகக் கொண்டிருப்பதால், அது கெட்டதாகக் கருதப்படுகிறது. இவ்வாறு எந்தவொரு செயலின் நல்லதும் கெட்டதும் அது செய்யப்படும் போது விளைகின்றவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் என்பதாக பின்விளைவுவாதிகள் குறிப்பிடுகின்றனர். பின்விளைவுவாதத்தின் பிரதான பிரிவாக பயனெறிவாதம் காணப்படுகின்றது.

**1.1 பயனெறிவாதம்** (*Utilitarianism*)

இதனை தமிழில் பயன்வழிவாதம் என்றும் அழைப்பார்கள். பயனெறிவாதம் என்பது பின்விளைவுவாதத்தின் மிகவும் முக்கியமான ஒரு பிரிவாகவும், செல்வாக்குமிக்க கோட்பாடாகவும் காணப்படுகின்றது.

பயனெறிவாதிகளின் கருத்துப்படி, எந்தவொரு செயலும் அதிக பொது நலனையும், பயனையும் விளைவாகக் கொண்டிருந்தால், நல்லதாகக் கருதப்படும். மாறாக, பொது நலனையும், பயனையும் குறைந்தளவில் பின்விளைவாகக் கொண்ட எந்தவொரு செயலும் ஒழுக்கப் பெறுமானம் குறைந்ததாகவே கருதப்படும். இதன்படி, ஓரிடத்தில் உண்மை பேசுவதற்குப் பதிலாக, பொய் கூறுவது அதிக பொது நலனையும், பயனையும் கொண்டிருந்தால், அது உண்மை பேசுவதைவிடவும் அதிக ஒழுக்கப் பெறுமானத்தைக் கொண்டிருக்கிறது.

பயனெறிவாதிகள் பார்வையில், முக்கியமாகக் கருதப்படுவது பொது நலனும், பயனும் ஆகும். ஒரு விடயத்தில் ஒரு அப்பாவியைக் கொலைசெய்வது, அவனைப் பாதுகாப்பதைவிடவும் அதிக பொதுப் பயனைக் கொண்டிருந்தால், ஒழுக்கத் தீர்ப்பின்படி அம்மனிதனைக் கொலைசெய்வதே சிறந்ததாகும். உள்ளுணர்வுவாதியான ஜி.ஈ.மூவர் பயனெறிவாதத்தை ஆதரித்த ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பயனெறிவாத்தில் இரு பிரதான எண்ணக்கருக்கள் உள்ளன.

1. பயன் (*Utility*)
2. சமத்துவம் (*Equality*)

**பயனெறிவாதத்தில் பயன் (*Utility*) என்றால் என்ன?**

பயனெறிவாதத்தில் பயன் என்றால் என்ன? என்பது குறித்து கருத்து முரண்பாடுகள் உள்ளன. சிலர் பயன் என்றால் இன்பம் மட்டுமே என்று குறிப்பிடுகின்றனர். ஆனால், மற்றும் சிலர் பயன் என்பதை இன்பத்திற்குள் மட்டும் அடக்கிவிடமுடியாது என்று கூறி, பயன் என்பதற்கு பல்வேறு அர்த்தங்களைக் கொடுத்து, பன்மைவாதத்தை முன்வைக்கின்றனர்.

**அ. இன்பவாதம்** (*Hedonism*)

துநசநஅல டீநவொயஅ மற்றும் துழாெ ளுவரயசவ ஆடைட போன்ற அநேக முக்கியமான பயனெறிவாதிகள் அதிகப்படியான பயன் குறித்துப் பேசும்போது, அதிகப்படியான இன்பம் (*Pleasure*) என்பதாகக் குறிப்பிடுகின்றனர். இதன்படி, பயன் என்பது இன்பமாகும். ஏனையவற்றை விடவும் இன்பத்தை அதிகப்படியாக்கும் எந்த செயலும் பெறுமானமிக்கதாகக் கருதுகிறார்கள். இவர்களின் பார்வையில், ஒழுக்கச் செயலின் நோக்கம், மனித சமுதாயத்தில் இன்பத்தையும், சந்தோஷத்தையும் உருவாக்கி, பெருகச் செய்வதாகும்.

எந்தவொரு செயலும் ஆரம்பத்தில், தவறாகவோ, வெறுப்பாகவோ இருந்தாலும் இன்பத்தை அதிகரிக்குமானால் ஒழுக்க ரீதியில் நல்லதும், ஏற்புடையதும் ஆகும். என்றாலும், "இன்பங்கள்" வித்தியாசமானவை. சுவையான உணவை உண்பதால் விளையும் இன்பம், பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக்கொள்வதால் விளையும் இன்பத்தை விடக் குறைவானதாக இருக்கலாம். இதனால், ஜெர்மி பெந்தம் இன்பத்தை அளவிடுவதற்கான பொதுவிதிகளை உருவாக்க முயற்சித்தார். ஆனால், ஜான் ஸ்டூவர்ட் மில் சில இன்பங்கள் அளவிட முடியாதவை என்றார்.

### ஆ. பன்மைவாதம் (*Pluralism*)

சில பயனெறிவாதிகள் பயன் என்பதை "இன்பம்" என்பதற்குள் மட்டும் அடக்கிவிட விரும்பவில்லை. மாறாக, பயநலன் என்பதை வரைவிலக்கணப்படுத்துவதில் பன்மைவாதத்தை முன்வைத்தனர். பு. நு. ஆழழசந போன்றோரின் பார்வையில், பயன் என்பது இன்பம், அறிவு, சிறப்பு ஆகிய மொத்தமுமாகும்.

### பயனெறிவாதத்தில் சமத்துவம் (*Equality*) என்றால் என்ன?

பயனெறிவாதத்தில் சமத்துவம் என்பது, எந்தவொருவரும் தனியாள் என்றாலும் அளவிடும்போது ஏனையோருக்குச் சமமானவர் என்பதாகவே கருதப்பட வேண்டும். உதாரணமாக, நான் ஒரு மருத்தவராக இருந்து, ஒரேநேரத்தில் எனது தாய்க்கு மருத்துவம் செய்வதா? அல்லது யாரோ ஐந்து பேருக்கு மருத்துவம் செய்வதா? என்று வந்தால், அந்த ஐந்து பேருக்கே நான் மருத்துவம் செய்ய வேண்டும். ஏனெனில், அவர்களும் எனது தாயும் சமமானவர்கள். அதேநேரம் அவர்கள் எண்ணிக்கையில் அதிகப்படியானவர்கள்.

### விமர்சனங்கள்

மனித ஒழுக்கச் செயற்பாடுகளின் தொடர்பில் ஒருவகையான கணித அளவீட்டுப் போக்கானது, நம் மீது கடமைப்பாடுள்ளவர்களின் விடயத்தில் எமது கடமைகளை புறக்கணித்துவிடக் கூடியதாக உள்ளது. மேலே கூறிய உதாரணத்தில் எனது தாயின் விடயத்தில் எனக்குள்ள கடமைப்பாட்டை நான் ஒதுக்கிவிடுவது எந்தளவு நீதியாகவும், ஒழுக்கமாகவும் இருக்க முடியும். எனக்காக தனது வாழ்வை அர்ப்பணித்த தாயையும், யாரோ சம்பந்தமில்லாத ஐந்துபேரையும் பயனெறிவாதம் ஒன்றிணைத்துப் பார்க்கின்றது.

ஒழுக்கவியல் தொடர்பில் இன்பவாதத்தின் நோக்குநிலை, மனித திறமைகளையும் ஆளுமைகளையும் அவனது மிருகநிலையிலான வாழ்க்கைக்கு அடிமையாக்கிவிடுகிறது. ஒழுக்கப் பெறுமானங்களை மனிதனின் சரிவுநிலைகளான இச்சைக்கும், மிருககுண உந்துணர்வுக்கும் கீழிறக்கிவிடுகின்றது.

பயனெறிவாதம். குடும்பம் மற்றும் நட்பு ரீதியான உறவுநிலையை பலவீனப்படுத்திவிடுகிறது. ஏனெனில், குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் தனித்துவமான இடத்தைக் கொடுப்பதில்லை.

பயனெறிவாதம் தொடர்பில் மற்றொரு முக்கியமான விமர்சனம், பயனை அதிகப்படியாக்குவதில் காணப்படும் நியாயமற்ற போக்காகும். உதாரணமாக, நான் குறிப்பிட்ட தொகைப் பணத்தைக் கொண்டு இரு கார்களை இருவருக்கு வாங்கிக்கொடுத்தால் 100 வீதம் சந்தோசப்படுவேன். அதேநேரம் அதேதொகை பணத்தைக் கொண்டு பத்து மோட்டார் சைக்கிள்களை பத்துப் பேருக்கு வாங்கிக்கொடுத்தால் 50 வீதம் சந்தோசப்படுவேன் என்று வைத்துக்கொண்டால், நான் 100 வீதம் சந்தோசப்படுவேன் என்பதற்காகவும், இருவர் அதிகப்படியாக பயனடைவார்கள் என்பதற்காகவும் முதலாவது காரியத்தை புரிந்தால், தேவையுடைய பத்துப்பேர் பாதிக்கப்படுவார்கள். இதனால், பயனெறிவாதம் பங்கீட்டு நீதிக்கு எதிராக அமைகின்றது.

### 2.கடமை-வாதம் (*Deontology*)

சிலநேரங்களில் கடமைவாதம், பின்விளைவுவாதம் அல்லாதது (*Non-Consequentialism*) என்றும் குறிப்பிடப்படுகின்றது. பின்விளைவுவாதத்திற்கு மாற்றமாக, கடமைவாதிகள் ஒரு செயல் பற்றிய ஒழுக்கத் தீர்ப்புக்கான அளவீடு அச்செயலின் இயல்பாக (*Nature of Action*) இருப்பதாகக் கருதுகின்றனர். உதாரணமாக, பொய் கூறுவது தன்னளவிலேயே ஒரு கெட்டதாகவும், வெறுக்கத்தக்கதாகவும் இருக்கிறது. அது எத்தகைய பின்விளைவைக் கொண்டிருந்தாலும் பிழையானதும், கெட்டதுமாகும். அவ்வாறே, உண்மை சொல்வது, அது எந்தவகையான சங்கடமான விளைவை ஏற்படுத்தினாலும் தன்னளவில் நல்லதாகவும் வரவேற்கத்தக்கதாகவும் இருக்கிறது.

கடமைவாத ஒழுக்கக் கோட்பாட்டாளர்களில் முதன்மையானவராக இமானுவல் காண்ட் காணப்படுகிறார். நல்லதை அல்லது கெட்டதை தன்னளவில் கொண்ட ஒரு செயலை மதிப்பிடுவதற்கான வழியாக

“பொதுமையாக்கப்படல்” (*Universalizability*) எனும் எண்ணக்கருவை முன்வைக்கிறார்.

அதாவது, ஒரு காரியத்தைப் புரியும்போது தனது மனச்சாட்சியின்படி, மற்றவர்கள் இதனை என்னுடைய விடயத்தில் செய்யக் கூடாது என்று உணர்ந்தநிலையில் தான் அதனை மற்றவர்களின் விடயத்தல் செய்ய விரும்பினால் அக்காரியம் கெட்டதாகும். அவ்வாறே, ஒரு காரியத்தை எல்லோரும் செய்ய வேண்டும் என்று விரும்பினால் அக்காரியம் நல்லதாகும். உதாரணமாக மற்றவர்களின் விடயத்தில் நம்பிக்கைக்கு மாறுசெய்வதை தான் விரும்பினாலும், மற்றவர்கள் தனக்கு அவ்வாறு செய்யக் கூடாது என்று கருதினால் அது பொதுமையாக்கப்படமாட்டாது. எனவே, இவ்வாறு பொதுமையாக்கப்படாமை அக்காரியம் ஒழுக்கமற்றது என்பதற்கான அடையாளமாகும். அவ்வாறே தானும் உண்மை பேசி, மற்றவர்களும் உண்மை பேசவேண்டும் என்று விரும்பும்போது, இக்காரியம் ஒரு ஒழுக்கமான காரியம் என்பதையும், நல்லது என்பதையும் இப்பொதுமையாக்கம் குறிக்கிறது.

எனவே, காண்டைப் பொருத்த மட்டில், ஒரு நியம மதிப்பீட்டின்படி, (அதாவது, குறித்த விடயம் பொதுமையாக்க முடியுமானதா? இல்லை?) அதன் பின்விளைவைக் கருத்திற்கொள்ளாமலேயே அக்காரியத்தை நல்லதா? அல்லது கெட்டதா? என்று கூறமுடியும்.

காண்டின் நோக்கில், அப்பாவி மனிதர்கள் கொலை செய்யப்படலாம் போன்ற பின்விளைவுகளைக் கொண்டிருந்தாலும் கூட உண்மை சொல்வது, எப்போதும் நல்லதாகும். ஏனென்றால், அது பொதுமையாக்கப்படல் என்ற காரணத்தை தன்னோடு எப்போதும் கொண்டுள்ளது. அவ்வாறே, சில நேரங்களில் அனுகூலங்களைக் கொண்டிருந்தாலும் கூட பொய் கூறுவது எப்போதும் கெட்டதாகும். ஏனெனில், அது எப்போதும் பொதுமையாக்கப்படுவதில்லை. காண்ட் குறிப்பிடும் ஒழுக்க கடமை வாதத்திற்கு முழுமைவாதம் (*Absolutism*) என்று அழைக்கப்படுகின்றது.

### டேவிட் ரொஸ்ஸின் பார்வை[1]

டேவிட் ரொஸ் (*David Ross*), காண்டின் கடமைவாத ஒழுக்கவியலை சிறிய மாற்றங்களோடு ஏற்றுக்கொள்கிறார். அவரது கருத்தின்படி, சில காரியங்கள் அவற்றின் பின்விளைவுகளைக் கருத்திற்கொள்ளாமல் தன்னளவிலே ஒழுக்கப் பெறுமானத்தைக் கொண்டதாக உள்ளன. உதாரணமாக, உண்மை பேசுவது முதல் கட்டத்தில் நல்லதாக உள்ளது. ஆனால், ஒழுக்க விதிகளின் முரண்பாடுகளைக் கருத்திற்கொள்ளும் போது, உண்மை பேசுதல் எனும் ஒரு ஒழுக்க விதி, அப்பாவியின் உயிரைக் காப்பாற்றுதல் எனும் மற்றொரு ஒழுக்க விதியோடு முரண்படும்போது அதன் பொதுமையாக்கப்படல் எனும் நிலையிலிருந்து வரையறுக்கப்படுகிறது. இந்நிலையில் உண்மை பேசுவது, அப்பாவியின் உயிரைக் காப்பாற்றுவது போன்ற ஒழுக்க விதிகளோடு முரண்படக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் குறித்த காரியம் நல்லதாக அமையும். மாறாக, பொதுவாக நல்லது என்று கூறமுடியாது.

உண்மையில் ரொஸ்ஸின் பார்வையில், ஒழுக்க விதிகள் விரிவானதாகுமே அன்றி, பொதுமைப்படுத்தப்படமாட்டாது. இவ்வகையில், விரிவாகக் காணப்படும் ஒழுக்க விதிகள் வரையறுக்கப்படலாம். ஒழுக்க விதிகளை வரையறுப்பதும், குறிப்பாக்கிக்கொள்வதும் அவற்றின் விளைபயன்களைப் பொறுத்தல்ல. மாறாக, மிகவும் முக்கியமான ஒரு ஒழுக்க விதியின் அடிப்படையிலாகும். இதன்படி, உண்மை பேசுவது பொதுப் பயன் அல்லது சந்தோஷத்துடன் முரண்படுவதன் மூலம் வரையறுக்கப்படுவதில்லை. ஏனெனில், பொதுப் பயனை அல்லது சந்தோஷத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றொரு ஒழுக்க விதி கிடையாது.

ரொஸ்ஸின் பார்வையில் எல்லா ஒழுக்கப் பொதுவிதிகளுக்கும் இடையிலே, உடன்படிக்கையைப் பாதுகாத்தல், நீதி, நல்லுபகாரம் புரிதல் போன்ற தலையாய ஒழுக்க விதிகள் காணப்படுகின்றன. இவற்றுடன், ஏனைய ஒழுக்கவிதிகள் முரண்படும் போது அவைகளே வரையறுக்கப்படுகின்றன.

### விமர்சனம்

ஒழுக்கவியல் சட்டங்கள் சில நேரங்களில் தமக்குள் முரண்படுகின்றன. இதனால், சில விதிவிலக்குகளை அனுமதித்தாக வேண்டியிருக்கிறது. உண்மை சொல்வதானது, ஒரு அப்பாவியின் உயிரைப் பாதுகாப்பதோடு முரண்பட்டால், தனது ஒழுக்கப் பெறுமானத்தை இழந்துவிடுகிறது. அவ்வாறே, அது இழிவானதும் கூட.

---

[1] https://www.iep.utm.edu/ross-wd/#H6

## தற்போதைய சமூகத்தில் நாம் காணும் ஒழுக்கவியல் பிரச்சினைகள்

தற்போதைய சமூகத்தில் பல்வேறு ஒழுக்கவியல் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடுகளையும், சமூகங்களையும் பொருத்து வேறுபடலாம். என்றாலும், பின்வரும் ஒழுக்கப் பிரச்சினைகள் நமது சமூகத்தில் பெரும்பாலும் காணப்படும் பிரச்சினைகளாக உள்ளன. அவற்றுள் மிகவும் முக்கியமானவை பின்வருமாறு.

1. போர் மற்றும் சித்திரவதை (*War and torture*)

2. கருக்கலைப்பு (*Abortion*)

3. ஆபாசம் மற்றும் தணிக்கை (*Pornography and censorship*)

4. போதைப்பொருள் (*Drug*)

5. ஊடக ஒழுக்கவியல் (*Media Ethics*)

**போர் மற்றும் சித்திரவதை** (*War and torture*)

அண்மைக்காலமாக இலங்கை, மியான்மார், ஈராக் மற்றும் சிரியா போன்ற பல்வேறு உலக நாடுகளில் பெருமளவிலான மனித உயிர்ச்சேதங்களை உண்டுபண்ணிய பாரிய போர்களைச் சந்தித்திருக்கிறோம். இப்போர்களின்போது, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்திற்கும், போர் விதிமுறைகளுக்கும் முரணாக மனித உயிர்கள் தொடர்பில் ஒழுக்கமற்ற செயற்பாடுகளும், குற்றச் செயல்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அப்பாவியான, நிராயுதபாணியான மக்களைக் கொலைசெய்தல், அவர்களை வதை முகாம்களுக்கு குடியேற்றுதல், போர்க்கைதிகளை வதைத்தல் மற்றும் குடியிருப்புப் பகுதியை நாசம் செய்தல் போன்ற பல்வேறு ஒழுக்கத்துக்கு முரணான காரியங்களை இங்கே நாம் குறிப்பிட முடியும்.[2]

[2] Nicolas Werth, Karel Bartošek, Jean-Louis Panné, Jean-Louis Margolin, Andrzej Paczkowski, Stéphane Courtois, *The Black Book of Communism: Crimes, Terror, Repression*, Harvard University Press, 1999, page 5.

என்றாலும், சிலர் இவற்றை நியாயப்படுத்த முற்படுகின்றனர். இவர்களின் பார்வையில், போரில் எதிரிகள் தோல்வியைத் தழுவும் நிலை ஏற்படும் போது, பெரும்பாலும் குறிப்பிட்ட பிராந்தியத்தில் வாழும் மக்களை தமது கேடயமாகப் பயன்படுத்தி, தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றனர். அவ்வாறே, அம்மக்களும் தங்களது ஆதரவை எதிரிகளுக்கு வழங்குகின்றனர். இந்நிலையில், குறிப்பிட்ட நாட்டு இராணுவம் எதிரிகளை ஒழித்துக்கட்டி, போரை முடிவுக்குக் கொண்டுவரும் இக்கட்டான நிலைக்கு ஆளாகும்போது இவ்வாறான காரியங்கள் தவிர்க்க முடியாமல் போகின்றது என்பதாக குறிப்பிடுகின்றனர்.

**கருக்கலைப்பு** (*Abortion*)[3]

சமூக தளத்திலே பல்வேறு விவாதங்கள் கருக்கலைப்பு பற்றி இடம்பெற்றுவருதைக் காணலாம். பெரும்பாலும் இவை சரியானதா அல்லது தவறானதா? ஒழுக்கத்துக்குப் புறம்பானதா அல்லது சட்டத்திற்கு உட்பட்டதா? போன்ற கேள்விகளால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பொதுவாக எந்தவொரு விடயமும் விவாதிக்கப்படும்போது ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களும் இருக்கவே செய்வார்கள்.

கருக்கலைப்பு ஒழுக்கத்திற்கும், மனித மதிப்பீடுகளுக்கும் முரணானது என்று எதிர்ப்பாளர்களும், தாயின் உயிருக்க்கு ஆபத்து இருப்பின் அனுமதிக்கலாம் என்று ஆதரவாளர்களும் குறிப்பிட்டுவருகின்றனர். உண்மையில் கருக்கலைப்பை மேற்கொள்ளும் பெண்ணுக்கு அல்லது தம்பதியினருக்கு இது உடல் – உள ரீதியில் பிரச்சினையாக அமைவதாக மருத்துவர்களும், உளவியலாளர்களும் குறிப்பிட்டு வருவது கவனத்திற்கொள்ள வேண்டியதாகும்.

ஒழுக்கவியல் ரீதியாக, கருக்கலைப்பு தவறானது அல்லது சரியானது என்போரின் வாதப்பிரதிவாதங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

கருவானது நம்மைப் போன்ற முழுமனிதனாக வருவதற்குரிய திறனைப் பெற்றுள்ளது. இந்நிலையில் ஒரு கருவைக் கொள்வது ஒரு மனிதனைக் கொள்வதைப் போன்றது. எனவே, கருக்கலைப்பு தவறானது என்று எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர். ஆனால், ஒரு மனிதனுக்கான வரையறைக்குள் மனிதக்கரு உள்ளடங்குவதில்லை. கரு என்பது ஒரு உயிரணு போன்றது. அதனைக் கொள்வது கொலை குற்றமாகவிருந்தால், விபத்தின்போது ஒரு மனிதனின் உடல்பாகம் இழக்கப்படுவதற்கு யாராவது காரணமானால், அவரும் ஒரு கொலைகாரன் போன்றே பார்க்கப்பட

[3] https://opinionfront.com/ethical-issues-on-abortion

வேண்டும் என கருக்கலைப்பு ஆதரவாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வாறே, கற்பழிப்பு போன்ற துரதிருஷ்டவசமான சம்பவங்களினால் விரும்பாத கரு உருவானால் அதனைக் கலைப்பதற்கு ஒரு தாய்க்கு இதில் உரிமை இல்லையா? பொருளாதார வசதியின்மை போன்ற காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்வது தவறா? என்றும் இவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இவ்வாறு, வாதப்பிரதிவாதங்களோடு இப்பிரச்சினை தொடர்ந்தவண்ணம் உள்ளது.

**ஆபாசம் மற்றும் தணிக்கை** (*Pornography and censorship*)[4]

ஆபாசம் தொடர்பான பிரச்சினை சினிமாக்களில் மாத்திரமன்றி, சமூக பொது வாழ்க்கையிலும் கூட இன்று பெருகி வரும் ஒழுக்கப் பிரச்சினையாக மாறியிருக்கிறது. இது இன்றைய கட்டுப்பாடில்லாத பல்லூடக உலகில் பேஸ்புக், டூடர், டிக்டாக் போன்றவற்றிலும், ஏனைய இணையத்தளங்களிலும் பாலியல் ரீதியான வீடியோக்களையும், ஒடியோக்களை வெளியிடுவதை பலர் சர்வசாதாரணமாகக் கொண்டுள்ளனர். இது மிகப் பெரும் ஒழுக்கப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

ஐரோப்பிய இளைஞர்களில் 20 வீதமானோர் அன்றாடம் ஆபாசம் சார்ந்த வீடியோக்களைப் பரிமாறிக்கொள்வதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் சினிமாக்களில் இவ்வாறான காட்சிகள் இடம்பெறாமல் தடுப்பதற்காக தணிக்கைக் குழுவினர் இருந்துவந்தனர். ஆனால், தற்போதைய நிலையில் இணையத்தளங்களினூடாக தணிக்கையற்ற ஆபாச வீடுயோக்கள் சர்வசாதாரணமாக வெளியிடப்படுவதால் இளைய தலைமுறையினரின் ஒழுக்க வாழ்வு கேள்விக்குள்ளாகி வருகின்றது.

சிகாகோ பல்கலைக்கழக பேராசிரியர் ஜீன் பெத்தே எல்ஷைனின் கருத்துப்படி, நாம் பொறுப்பான குடிமக்களாக இருக்க வேண்டுமென்றால் தார்மீக, ஒழுக்க விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். நமது சமூகம் எப்படியானது? அது நியாயமாகவும், கண்ணியமாகவும் இருக்கிறதா? இது மனித குடியிருப்பிற்கான குறிப்பாக, இளம் வயதினருக்கான தகுந்த சூழலைக் கொண்டுள்ளதா? போன்ற கேள்விகளை நமக்குள் நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். அப்போதுதான்,

[4] https://www.thecrimson.com/column/democracy-of-the-dead/article/2011/3/28/porn-pornography-moral-doeful/

ஒழுக்க ரீதியிலான பிரச்சினைகளுக்கு நாம் தீர்வைக் கண்டுகொள்ள முடியும் என்கிறார்.

**போதைப்பொருள்** (*Drug*)[5]

இன்று போதைப் பொருள் பாவனையும், அதற்கு அடிமையாகுவதும் பல இடங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் காணப்படுகின்றமை ஒரு ஒழுக்கப் பிரச்சினையாக மாறியிருக்கிறது. குறிப்பாக, இது இளைஞர்கள் மத்தியில் பெருகிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால், இளைஞர்கள் உடல் – உள ரீதியாகவும், கல்வி சமூக பொருளாதார ரீதியாகவும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

போதைப்பொருள் துஷ்பிரயோகம் தொடர்பான அமெரிக்க தேசிய நிறுவனம் 2016ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்காவில் மட்டும் போதைப்பொருள் பாவனையால் 64000 பேர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளத. என்றாலும், சிலர் இது தங்களது உரிமை என்பதாகக் கருதுகின்றனர். யாருக்கும் தொந்தரவு கொடுக்காத நிலையில், தனிப்பட்ட இடங்களில் பாவிப்பதில் என்ன தவறு இருக்கின்றது என்று கூறுவோரும் உள்ளனர்.

**ஊடகவியல்** (*Media*)

எவ்வித சந்தேகமுமின்றி, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நடப்புகளின் உண்மைத் தன்மையினைப் பிரதிபலித்தல், ஒரு ஊடகத்தின் செயற்பாடுகளில் இன்றியமையாத ஒன்றாகும். இவ்விடயத்தில் ஒரு ஊடகம், தனிப்பட்ட அல்லது வேறுபட்ட குழுக்களின், அமைப்புகளின் பக்கச்சார்புகளின்றி செயற்படுவது அவசியமானது. ஒரு சிக்கலான, கருத்து முரண்பாடான நேர்வுகள் இடம்பெறும்போது சார்பணி, எதிரணி எனும் இரு தரப்பினரின் நியாயப்பாடுகளும் மக்களுக்குச் சென்றடையும் வகையில் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குப் போதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு தெளிவுபடுத்தப்படல் வேண்டும். ஆனால், ஊடக நடவடிக்கைகள் உண்மை மற்றும் நேர்மையின் அடிப்படைகளில் இடம்பெறாமை ஒரு ஒழுக்கப் பிரச்சினையாக நமது சமூகத்தில் மாறியிருக்கின்றது.

இவ்விடத்தில் 'ஊடக தர்மம்' *(Media Ethics)* குறித்து பேசவேண்டியுள்ளது. ஊடக தர்மம் என்பது ஒரு ஊடகக் குழு தனது மனச்சாட்சிக்கு விரோதமாக

---

[5] https://study.com/academy/lesson/ethical-issues-related-to-drug-abuse-addiction.html

செயற்படுவதை பண்பாட்டின் வீழ்ச்சியாகக் கருதுகிறது. இவ்வகையில் ஊடக தர்மமானது, தம்மை நிர்ப்பந்திக்கின்ற எவ்வித வெளிஅழுத்தமோ அல்லது மீறினால் தாம் தண்டிக்கப்படலாம் என்ற அச்சமோ இல்லாமல், ஊடகவியலாளர்கள் தம் இயல்பூக்கம் மற்றும் உள்ளுணர்வின் அடிப்படையில் தமது துறைசார் வேலைகளை நிறைவேற்றுவதில் தாம், சுயமாகவே கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளின் சேர்க்கையாகும். இந்நெறிமுறைகளை நாம் மூன்று அம்சங்களில் உள்ளடக்கி நோக்கலாம்.

1. அறிக்கை தயாரித்தல் மற்றும் அதுபோன்ற செயற்பாடுகளின்போது உண்மை, நேர்மை மற்றும் அழகுணர்ச்சி ஆகியவற்றைக் கொண்டிருத்தல்.
2. அறிக்கை தயாரிப்போர், குறிப்பாக செய்தி மூலங்களோடு நேரடியாகத் தொடர்புற்றிருத்தல்.
3. பல்வேறு குழுக்களின் இலாபங்களுக்காகவும், நலன்களுக்காகவும் செயலாற்றாமல் இருத்தல்.

இவ்வகையில் தனது அறிக்கையிலோ, செய்தியிலோ பொய் அல்லது ஏமாற்றல் போன்ற கையாடல்களை ஒரு ஊடகத்தினர் மேற்கொள்ளல், தாம் நேரடியாகப் பெற்ற கருத்துக்களை மாற்றுதல், ஒருவருடைய அனுமதியின்றி அவரது கருத்துக்களை ஒலிப்பதிவு செய்தல், நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் பிழையான தகவல்களை வெளியிடுதல் மற்றும் ஒருவரின் அனுமதியின்றி அவரைப் புகைப்படம் எடுத்துவெளியிடல் போன்றவை ஊடக தர்மத்திற்கு அப்பாற்பட்டவை. ஊடக தர்மம் பேணப்படாதபோது, யதார்த்தத்தின் பிரதிபலிப்பு அவ் ஊடகத்திடம் இருக்காமல் போவதோடு, சமூகத்தில் இப்படியான ஊடகத்தினால் எந்த மாற்றமும் நிகழாது.

எந்தவொரு ஊடகமும் தனது நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதற்கு நற்பெயரைக் கொண்டிருத்தல், பரந்துகாணப்படல், அண்மித்திருத்தல், உண்மையாக இருத்தல், துல்லியமாக அறியப்பட்டிருத்தல், புதியதாக இருத்தல் மற்றும் அனைத்தையும் பொதிந்திருத்தல் முதலானவற்றை உள்ளடக்கிய 'செய்தியின் அடிப்படை விதிகள்' *(The basic principles of news)* என்பதைக் கடைப்பிடித்தல் அவசியமானது. மேற்கூறப்பட்ட அடிப்படைகள் ஒவ்வொன்றும் ஊடக – தொடர்பாடற்றுறையில் பல்வேறு வரைவிலக்கணங்களையும், கருத்தாக்கங்களையும் கொண்டிருப்பதோடு அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் காணப்படுகின்றன. செய்திகள் விரைவாகவும், புதிதாகவும் வெளியிடப்படும் அதேநேரம், அவை உண்மையானவையாகவும், துல்லியமாகக் கண்டறியப்பட்டவையாகவும்

இருப்பதில் கவனம் செலுத்துதலானது, ஊடகத்திற்கான நம்பகத்தன்மையைப் பெற்றுக்கொடுப்பதில் முக்கிய பங்கை வகிக்கிறது.

இதனால் நம்பகத்தன்மை வாய்ந்த ஒரு ஊடகத்தின் பின்னால் எப்போதும் மக்கள் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்பகத்தன்மையுள்ள கருத்துப் பரிமாற்றத்தினால் மட்டுமே சமூக மாற்றத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்த முடியும்.

**முடிவுரை**

பொதுவாக சமூகத்தில் காணப்படும் ஒழுக்கப் பிரச்சினைகள் பல்வேறு இலாப நோக்கங்களுக்காகவும் அல்லது அது பற்றிய தெளிவின்மை, அறியாமை போன்ற காரணங்களுக்காகவும் தொடர்ந்தவண்ணம் உள்ளன. அதேநேரம், ஒழுக்கப் பிரச்சினைகளாகக் கருதப்படும் காரியங்கள் தவறானவையும், பிழையானவையும் என்று தீர்மானிப்பதற்குள்ள அறநெறி அளவீடுகளின்மீது கூட விமர்சனங்கள் காணப்படுவது ஒரு போதுமான, நிலையான மற்றும் முழுமையான அளவீட்டின்பால் நாம் கொண்டிருக்கின்ற தேவைப்பாட்டை உணர்த்துகின்றது.

என்றாலும், தற்போதுள்ள ஒழுக்க விதிகளான நற்குணவாதம், பின்விளைவுவாதம் மற்றும் கடமைப்பாட்டுவாதம் போன்ற ஒழுக்கக் கோட்பாடுகளை ஒன்றிணைத்து ஒன்றையொன்று பூரணப்படுத்தக்கூடிய ஒரு ஒழுக்கப் பிரமாணத்தொகுப்பை உருவாக்கிக்கொள்வதும், அதன்படி நாம் எதிர்நோக்கும் ஒழுக்கப்பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதும் சிறந்த முடிவாக அமையலாம்.

இவ்விடயத்தில் ஒரு நடுநிலையான, சாத்தியப்பாடான ஒரு தீர்வை நோக்கி டேவிட் ரொஸ் முயற்சித்ததைப் போன்று நாமும் முயற்சிப்பது ஏற்புடையதாகும். உலகளவில் நிறைவேற்றப்படும் ஒழுக்கவியல் தவிர்ந்த எந்தவொரு காரியமும், பகுத்தறிவுபூர்வமான மூலோபாயத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்படுவதைப் போன்று, ஒழுக்கவியல் சார்ந்த காரியங்களும் அதே பகுத்தறிவுபூர்வமான மூலோபாயத் திட்டமிடலின் மூலம் நிறைவேற்றப்படுவது சாத்தியமான ஒன்றாகும்.

இன்று பெருகிவரும் போர்-குற்றங்கள், போதைப்பொருள் பாவனை, ஆபாசங்கள், கருக்கலைப்பு மற்றும் ஊடக மோசடி போன்ற ஒழுக்கப் பிரச்சினைகள் எமது சமூகத்தை, குறிப்பாக இளம் சமுதாயத்தைப் பாதித்துள்ளன. இந்நிலையிலிருந்து, அவர்களைப் பாதுகாப்பது எமது கடமையாக உள்ளது. இவைகள் குறித்த விளிப்புணர்வையும், அறிவூட்டலையும் சமூக அரங்கில் மேற்கொள்ளாத வரைக்கும் இதற்குத் தீர்வைக் காணமுடியாது.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**


- ✓ அனஸ், எம்.எஸ்.எம். *விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் : ஒரு முறையியல் நோக்கு.* கலாசார கற்கை வட்டம், 1996.
- ✓ Matthew Kieran. *Media Ethics*. Routledge, USA, 1998.
- ✓ David A. Gordon. *Controversies in Media Ethics*. 1998
- ✓ Nicolas Werth. *The Black Book of Communism: Crimes, Terror, Repression*, Harvard University Press, 1999.
- ✓ John Howie. *Ethical Issues in Contemporary Society*. 1995.


**Weblinks**


- ✓ https://opinionfront.com/ethical-issues-on-abortion
- ✓ https://www.thecrimson.com/column/democracy-of-the-dead/article/2011/3/28/porn-pornography-moral-doeful/
- ✓ https://study.com/academy/lesson/ethical-issues-related-to-drug-abuse-addiction.html
- ✓ https://www.iep.utm.edu/ross-wd/#H6

**நூலாசிரியரைப் பற்றி...**

**ஆதம் பாவா முகம்மது மர்வான்:** இலங்கையின் கிழக்கு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர் தனது பாடசாலைக் கல்வியை மட்/வாழைச்சேனை அந்நூர் தேசியப் பாடசாலையிலும் மட்/மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்திலும் பயின்றார். அதனைத் தொடர்ந்து, தனது உயர் கல்வியை ஈரான் இஸ்லாமியக் குடியரசிலுள்ள அல்-முஸ்தஃபா சர்வதேசப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு “மெய்யியல் மற்றும் மெய்ஞ்ஞானம்” (Philosophy and Mysticism) எனும் கல்வித் துறையில் சிறப்பு இளமாணிப் பட்டத்தையும், “ஒழுக்க மெய்யியல்” (Moral Philosophy) எனும் கல்வித் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.



தற்போது இலங்கையில் இயங்கிவரும் அல்-முஸ்தஃபா சர்வதேச பல்கலைக் கழகத்தின் இலங்கைக் கிளையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிவரும் இவர் மெய்யியல், அளவையியல், உளவியல், கல்வியியல் மற்றும் சமயம் ஆகிய துறைகளில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருவதோடு, இத்துறைகளில் சொற்பொழிவுகளையும், விரிவுரைகளையும் வழங்கி வருகின்றார். மேலும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பணியாற்றி வருகின்ற இவர், இலக்கியத் துறையிலும் சமூக சேவைகளிலும் ஈடுபாடு கொண்ட ஒருவராகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.